VGT

விருதுநகர் மாவட்டப் பள்ளிகள்

முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - ஆகஸ்ட் 2022

-----

## வகுப்பு 6

நேரம் : 1.30 மணி | தமிழ் | மதிப்பெண்கள்: 30

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **8×1=8**

1) நாள் முழுவதும் வேலை செய்து களைத்தவர்க்கு ................ ஆக இருக்கும்.
அ) மகிழ்ச்சி ஆ) கோபம் இ) வருத்தம் ஈ) அசதி

2) 'செம்பயிர்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................
அ) செம்மை+பயிர் ஆ) செம்+பயிர் இ) செமை+பயிர் ஈ) செம்பு+பயிர்

3) தாய்மொழியில் படித்தால் ................ அடையலாம்.
அ) பன்மை ஆ) மேன்மை இ) பொறுமை ஈ) சிறுமை

4) எட்டு+திசை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ................
அ) எட்டுத்திசை ஆ) எட்டிதிசை இ) எட்டுதிசை ஈ) எட்டிஇசை

5) "தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பாடியவர் ................
அ) கண்ணதாசன் ஆ) பாரதியார் இ) பாரதிதாசன் ஈ) வாணிதாசன்

6) கதிரவனின் மற்றொரு பெயர் ................
அ) புதன் ஆ) ஞாயிறு இ) சந்திரன் ஈ) செவ்வாய்

7) 'சித்தம்' என்பதன் பொருள் ................
அ) உள்ளம் ஆ) மணம் இ) குணம் ஈ) வனம்

8) சிட்டுக்குருவி வாழ முடியாத பகுதி ................
அ) துருவப்பகுதி ஆ) இமயமலை இ) இந்தியா ஈ) தமிழ்நாடு

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக:** **4×1=4**

9) தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப்பழமையான இலக்கணநூல் ................

10) இரண்டு மாத்திரை அளவுள்ள ஓரெழுத்துச் சொல் ................

11) பறவைகள் இடம் பெயர்வதற்கு ................ என்று பெயர்.

12) இந்தியாவின் பறவை மனிதர் ................

**III. குறுவினா: (எவையேனும் மூன்றனுக்கு மட்டும்)** **3×2=6**

13) **சொற்றொடரில் அமைத்து எழுதுக:**
(i) வாழ்நாள் (ii) தனிச்சிறப்பு

14) உயிருள்ள உடல் எது?

15) சிலப்பதிகாரக் காப்பியம் எவ்வெவற்றை வாழ்த்தித் தொடங்குகிறது?

16) தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

17) பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்கள் யாவை?

**IV. சிறுவினா: (எவையேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி)** **1×3=3**

18) காலவெள்ளத்தை எதிர்த்து நிற்கும் மொழி தமிழ் என்று கவிஞர் கூறுவதன் காரணம் என்ன?

19) சிட்டுக்குருவியின் வாழ்க்கை பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

**V. கட்டுரை எழுதுக: (எவையேனும் ஒன்றனுக்கு மட்டும்)** **1×6=6**

20) விடுப்பு விண்ணப்பம் - கடிதம் எழுதுக. **(அல்லது)**
'கிழவனும் கடலும்' என்னும் படக்கதையை உங்கள் சொந்த நடையில் கதையாக எழுதுக.

**VI. மனப்பாடப்பகுதி: (அடிபிறழாமல் எழுதுக)** **1×3=3**

21) 'இன்பத்தமிழ்' பாடலை எழுதுக.

----------